8th March 1963]

மட்டும் மாணவர்களிடத்திலிருந்து பணம் வசூலிக்கிறார்கள். நூலை விற்கும் பணத்தை என்ன செய்கிறார்கள் என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நூல் விற்கப்படுகிற பணம் கணக்கில் சேருகிறது—அரசாங்கக் கணக்கில். எந்த முறையில் செய்யப்படுகிறது என்பதைப்பற்றி தனியாகக் கேள்வி வேண்டும்.

'கிராமப்பணிகள் டிப்ளமா' படிப்பு

*158 கேள்வி.—**திரு. நா. ப. செங்கோட்டுவேலு:** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கோயம்புத்தூர், ஸ்ரீராமகிருஷ்ண வித்தியாலயம் நடத்தும் 'கிராமப் பணிகள் டிப்ளமா' படிப்பின் கீழ் 'கூட்டுறவு' பாடத்தைப் படித்த மாணவர்களுக்கு, வேலை வாய்ப்பிற்கு விசேஷ வசதிகள் எவையேனும் தரப்பட்டுள்ளனவா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: சென்னைக் கூட்டுறவுப் பணி (Madras Co-operative Service) சென்னைக் கூட்டுறவுத் துணைப் பணி (Madras Co-operative Subordinate Service) ஆகியவற்றில் நியமிக்கப்படுவதற்கு நிர்ணயித்துள்ள கல்வித் தகுதிகளுக்கு, உயர்தர கிராமக் கல்வி சம்பந்தமான தேசீயக் கவுன்சில் (National Council for Rural Higher Education) வழங்கும் "ரூரல் சர்விஸ் டிப்ளமா" இம்மாநிலத் திலுள்ள ஒரு பல்கலைக் கழகம் அளிக்கும் முதல்தரப் பட்டத் திற்குச் சமம் என்று அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறது. எனவே, கோயம்புத்தூர் ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயத்தினர் நடத்தும் "ரூரல் சர்விஸ் டிப்ளமா" வகுப்பில் "கூட்டுறவினை" ஒரு பாட மாக எடுத்துப் படித்த மாணவர்கள் மேற்சொன்ன பணிகளில் நியமிக்கப்பெறத் தகுதி பெறுகிறார்கள்.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு: ஸார், இது வரையில் எவ்வளவு பேர் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள் என்று அறிவிக்க முடியுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: இப்போது என்னிடத்தில் அந்தத் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் கொடுக்கலாம்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: கோயம்புத்தூர் பயிற்சிப் பள்ளியில் சோஷல் எடுகேஷன் டிப்ளமா வைத்திருப்பவர்களை அரசாங்கத்தில் நேரடியாக உத்தியோகத்தில் எடுத்துக்கொள்வதில்லை என்று உத்தரவு போட்டிருக்கிறார்களா? அவர்களுக்கு எந்தெந்த விதத்தில் மாற்று வேலை கொடுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: போடப் பட்டிருக்கிற உத்தரவு கோவாப்பரேஷன் சம்பந்தமாக இருப் பதாக எனக்குத் தெரியவில்லை.